1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினா 591 மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; தலைவரவர்களே, 591, 592 இரண்டும் தொடர்புடையதாக இருப்பதால் இந்த இரண்டு வினாக்களையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.

வீராணம் ஏரி கால்வாய்கள்.

*வினா எண். 591—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் ஏரி பாசனத்தில் மாதிரி சிமிண்ட் வாய்க்கால் கட்டி தண்ணீர் வீண்விரயம் இல்லாமல் பாசனம் செய்ய அரசு திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம். வீராணம் ஏரி வாய்க்கால்களான லால்பேட்டை வாய்க்கால், வெள்ளியக்குடி வாய்க்கால் ஆகிய இரண்டையும் சீர்ப்படுத்தும் முன்னோடி திட்டத்திற்கு (Pilot Scheme) ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடந்தேறி வருகின்றன.

*வினா எண். 592—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெறும் லால்பேட்டை வாய்க்காலை நவீனப்படுத்தி எவ்வளவு ரூபாய்க்கு திட்டம் போடப்பட்டது?

(ஆ) எப்போது இத் திட்டம் முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் பெறும் லால்பேட்டை வாய்க்காலை நவீனப்படுத்தும் திட்டத்தின் மதிப்பீடு ரூ 8.10 இலட்சம் ஆகும்.

(ஆ) 1979 ஆம் ஆண்டு கோடை மூடு காலத்தில் பெரும் பகுதி வேலைகள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நந்தன் கால்வாய் திட்டம்.

*வினா எண். 593—திரு கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதியில் நந்தன் கால்வாய் திட்டத்தில் பனைமலை ஏரிவரை கால்வாய் வெட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) நந்தன் கால்வாய் திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் பாசனம் பெறுகிறது?

(இ) அத்திட்டத்திற்கு அரசு எவ்வளவு செலவழித்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தென்னாற்காடு மாவட்ட முகையூர் தொகுதியில் நந்தன கால்வாய்த் திட்டத்தில் பனைமலை ஏரி ஏற்கனவே சேர்க்கப்பட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன.

(ஆ) நந்தன் கால்வாய் திட்டத்தின் மூலம் 6,654 ஏக்கர் பாசனம் பெறுகிறது.

(இ) இத்திட்டத்திற்காக டிசம்பர் 1978 முடிய செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,11,02,079 ஆகும்.

துறையூருக்கு அருகே புதிய அணைக்கட்டு.

*வினா எண், 594—திரு. கே. சௌந்தரராசன் & திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துறையூருக்கு அருகில் கொல்லி மலையில் இருந்து வரும் அருவியின் குறுக்கே அணை கட்டி நீர்த்தேக்கம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் இத்திட்டம் செயல்பட துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் ஆய்வில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில்.

*வினா எண். 595—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கான பிரேரணைகள் அரசுக்குக் கிடைத்துள்ளதா ?